**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.39/2021**
**PW4**

| | | |
|---|---|---|
| **Name** | : | பூபாலன் |
| **Father's Name** | : | சின்னசாமி |
| **Village** | : | பெரிய கல்லந்தல் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.10.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் பெரிய கல்லநத்தலில் குடியிருந்து மங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறேன். இவ்வழக்கில் இறந்த லட்சுமி என் அத்தை ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு சித்தப்பா மகன். 10.08.2020 அன்று மாலை 7.30 மணி அளவில் என் அண்ணன் ஆனந்தன் எனக்கு போன் செய்து என் அத்தை எங்கள் பக்கத்து நிலத்தில் உள்ள பாண்டியன் என்பவரது கிணற்றில் அத்தை இறந்து கிடப்பதாக சொன்னார். நான் விஏஓக்கும் தீயணைப்பு துறைக்கும் தகவல் சொன்னேன். பிரேதத்தை அங்கிருந்து எடுத்து திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். அங்கு சவக்கிடங்கில் இருந்த பிரேதத்தின் மீது கலசபாக்கம் போலிசார் விசாரித்தார்கள். அப்போது என்னுடன் காந்தி, வெங்கடேசன், ரவிச்சந்திரன் ஆகியோர் இருந்தார்கள். அப்போது போலிசார் செய்த பிரேத விசாரணை அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

இறந்துபோனவர் எனது அத்தை என்பதால் நான் என் பங்காளிகளுடன் கும்பலாக காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். காவல் நிலையத்திலும் எங்களிடம் கைபொப்பம் பெற்றார்கள். அதிலும் நான்

கையொப்பம் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் பிரதே விசாரணையில் உள்ள ஒப்புகை சீட்டில் நான் காவல் நிலையத்தில்தான் கையொப்பம் போட்டேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.